DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-241/2022

Prosecution witness - PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.வசந்தா | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

23.02.2026 - 12.40 PM

முதல் விசாரணை:-

1. நான் தொழிளால் துணை ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை.

2. கடந்த 2022ம் வருடம் நான் முதுகுளத்தூரில் தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது மேலதிகாரியான தொழிலாளர் உதவி ஆனையர் (அமலாக்கம்) அவர்கள் ஜுன் 2022ம் வருடம் ஒரு நாள் மாலையில் எனக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு மட்டியரேந்தல் என்ற கிராமத்தில் ஆடு மேய்க்கும் ஒரு சிறுவனை கொத்தடிமை தொழிலாளர் சட்டத்தின் கீழ் மீட்டெடுத்துள்ளதாக பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தகவல் வந்திருப்பதாகவும் ஆகவே நான் அங்கு செல்ல வேண்டுமென சொன்னார். அதன் பேரில் 17.06.2022ம் தேதியன்று திரு.பஞ்சாட்சரம், திரு.கதிரவன் என்பவரும் தொழிலாளர் உதவி ஆணையாளர் திரு.பாரி என்பவருடன் வந்திருந்தார்கள்.

3. நாங்கள் அனைவரும் பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றோம். அதன் பிறகு அங்கிருந்த அவர்களுடன் உதவி ஆணையர் பேசினார். அங்கு வைத்து நான் தொழிலாளர் சட்டத்தின் கீழ் மீட்டெடுக்கப்பட்ட சிறுவனையோ குற்றம் சாட்டப்பட்ட நபர்களையோ நான்

பார்க்கவில்லை. அதன்பிறகு இராமநாதபுரம் தொழிலாளர் உதவி ஆணையர் அமலாக்க அலுவலகத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட சிறுவனின் பெயர் ராஜமாணிக்கம் என்றும், அந்த சிறுவனுக்கு மேற்சொன்ன அலுவலகத்திலிருந்து புனரமைப்பதற்காக ரூ.30,000/- செக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிந்து கொண்டேன். போலீசார் விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: -</u>**

உதவி ஆணையர் போன் மூலம் தகவல் சொன்ன பிறகு நான் சம்பவ இடத்தில் செல்லவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட சிறுவனின் புனரமைப்பதற்காக கொடுக்கப்பட்ட பணம் சம்மந்தமாக ஆவணங்கள் எதையாவது பார்வையிட்டேனா என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்திலிருந்து புனரமைப்பதற்காக எவ்வித பணமும் செலவழிக்கப் படவில்லை. இந்த வழக்கின் புகார்தாரர் வருவாய் துறையை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கின் புகார்தாரர் அரசு அலுவலர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி